KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.36

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

தெருக்கூத்துக்கலையில் ஒப்பனை

Make-up in the Art of Therukoothu

Dr. A. Senthamaraikannan[1,*]

[1] Assistant Professor, Department of Tamil Sacred Heart Arts and Science College Perani, Viluppuram District – 605651

***Corresponding author:** Dr. A. Senthamaraikannan, senthamaraikannan1981a@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 5 October 2026
Revised: 10 October 2026
Accepted: 20 October 2026

Article ID
KIJTS-2026-0011

Peer review
Double-blind peer review

Keywords
Therukoothu
Makeup Art
Tamil Folk Theatre
Facial Painting
Costumes and Cosmetics
Performative Arts
Cultural Heritage
Dr. A. Senthamaraikannan

ABSTRACT

This research paper titled "Make-up in the Art of Therukoothu" comprehensively explores the traditional cosmetic and artistic practices of Tamil folk theatre without omitting key features of the subject. The study draws upon authentic external evidence and references to substantiate its analysis. It elaborates on the conceptual foundations of Therukoothu alongside the distinct nature, attributes, and techniques of its makeup art. The paper concludes with a detailed synthesis and summary, followed by formal citations and endnotes documenting the sources used in analyzing Therukoothu makeup.

How to cite this article: Dr. A. Senthamaraikannan (2026). தெருக்கூத்துக்கலையில் ஒப்பனை. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 458–468. https://doi.org/10.63300/kijts603112026.36
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் அ.செந்தாமரைகண்ணன்

உதவிப் பேராசிரியர்இதமிழ்த்துறை, சேக்ரட் ஹார்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பேரணி. விழுப்புரம் மாவட்டம்– 605651, கைப்பேசி எண்: 9884585800.

மின்னஞ்சல்: senthamaraikannan1981a@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

“தெருக்கூத்துக்கலையில் ஒப்பனை” என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு தலைப்பின் எக்காரணியும் விடுபடாமல் கூறப்பட்டுள்ளது. இக்கட்டுரை முழுவதும் இத்தலைப்புத் தொடர்பாக எழுதப்பட்டுள்ளதால் வெளியிலிருந்து சான்றாதாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டுரையில் வரும் தெருக்கூத்துப் பற்றிய கருத்துக்களும் தெருக்கூத்து ஒப்பனைப் பற்றிய இயல்புகளும் தன்மைகளும் விளக்கப்பட்டுள்ளன. கட்டுரையின் முடிவில் தொகுப்புரையும், முடிவுரையும் அதன் பிறகு, தெருக்கூத்து ஒப்பனையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஆதாரங்கள் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

முன்னுரை

தமிழ்நாட்டின் சிறந்த நாட்டுப்புறக் கலைகளில் தெருக்கூத்து முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஒரு கதையை இசையுடன் ஆடியும் பாடியும் உரையாடியும் நடித்தும் நிகழ்த்தப்படும் கலையாக இது திகழ்கிறது. இந்தக் கலைக்கு ஒப்பனை முக்கியமான ஒன்றாகும். ஒப்பனை (Mackup)அலங்கரித்தல் என்ற பொருள் என்றாலும் தெருக்கூத்தில் கூத்துக் கலைஞர்கள் செய்து கொள்ளும் அலங்காரத்தைக் குறிக்கிறது. ஒப்பனை செய்யும் பொழுது முதலில் முகத்திற்கு அரிதாரம் பூசுகிறார்கள் ஏனென்றால் உடைகள் மீது படாமல் இருப்பதற்கு. அரசன், ராணி, சூரன், அரக்கன், காளி, கட்டியங்காரன் (பஃப்பூன்) நாட்டியப்பெண், நாரதன் போன்ற ஒவ்வொரு வேடத்திற்கும் ஒப்பனையானது வித்தியாசப்படுகிறது. ஒப்பனையே ஒரு கலை எனலாம். கூத்துக் கலைஞர்கள் ஒப்பனை செய்யும் போதே உடையிலும் பேச்சிலும் கதாபாத்திரமாகவே மாறிவிடுகிறார்கள்.

கலைகள்

கலை எனப்படுவது ‘நுட்பமானத் தன்மை மற்றும் திறமையை உள்ளடக்கியது’ மனித நடத்தையினாலும் தம் கற்பனை வளத்தினாலும், கலை நுட்பத்திறமையடன் கூடிய பொருட்கள் (அ) நிகழ்வுகளைப் புணைந்துக் காட்சிப்படுத்தல் (அ) அரங்கேற்றல் (அ) கைவினை கலை நயம் படைத்தல் ஆகும். “கலை மூலம் பண்பாடு கலாச்சாரம், வரலாறு, அழகியல் போன்றவைகளை வெளிஉலகிற்கு பறை சாற்றுதல், பாராட்டுதலுக்காகவும், ரசிக்கும்படியாகவும் காட்சிப்படுத்தப்பட்டு பிற உயிரினங்களிலிருந்து மனிதனைத் தனித்துக்காட்டுவது கலை நுட்பமாகும்.”[1]உடல் மற்றும் உள்ளத்தின் திறன்களை

ஒருங்கிணைந்து கற்பனை வளத்தை ஊக்குவிப்பது கலையாகும். தமிழ் கலைகள் 64 ஆகும். இதில் 1. இசைக்கலை, 2. ஆடற்கலை, 3. நாடகக்கலை என்னும் மூன்று கலைகளை உள்ளடக்கியதுதான் தெருக்கூத்து.

தெருக்கூத்து

தமிழகத்தின் மிகப்பழமையான அரங்கக்கலை வடிவம் தெருக்கூத்து ஆகும். தெருக்களையே ஆடுகளமாகக் கொண்டு நிகழ்த்தப்படுவதால் தெருக்கூத்து

எனப்பெயர் பெற்றது. ஒரு கதையை இசையுடன் ஆடியும் பாடியும் உரையாடியும் நடித்தும் நிகழ்த்தப்படும் கலையாக இது நிகழ்கிறது.

தமிழ்நாட்டின் சிறந்த நாட்டுப்புறக்கலைகளில் தெருக்கூத்து முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தெருக்கூத்தானது இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழை ஒருங்கேக் கொண்ட நாட்டுப்புறக்கலையாகத் திகழ்கிறது எனலாம்.

தமிழ்நாட்டில் தெருக்கூத்து விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர் ஆகிய பகுதிகளில் பரவலாகக் காணப்படுகிறது. இந்தப்பகுதிகளில் தெருக்கூத்துக் கலைஞர்களின் கால்படாத கிராமங்களே இல்லை. எல்லா இடங்களுக்கும் சென்றுக் கூத்து ஆடுகின்றனர்.

தெருக்கூத்தானது கேரளத்திலுள்ள கதகளி, கர்நாடகத்தில் உள்ள யட்சகானம், ஆந்திராவிலுள்ள வீதிநாடகம் ஆகியவற்றுடன் தொடர்புப்படுத்திக் கூறப்படுகின்றனது. ஒப்பனை, உடை அலங்காரம், கதை சொல்லல், மேடை, இசை, சடங்குத்தன்மை என்பனவற்றில் பெரும் ஒற்றுமை காணப்படுகிறது. ஒரு புராண வடிவத்திலிருந்தே பின்னர் இவை மொழி ரீதியாக பிரித்திருக்க வேண்டும் என்ற ஓர் கருத்தும் உண்டு.

“நாடக மேடையோ! காட்சித்திரைகளோ! இல்லாமல் எளிய முறையில் தெருவில் நடத்தப்படும் கூத்து தெருக்கூத்தாகும். மூன்றுத் தெரு, நான்குத் தெரு சேருமிடத்தில் நிகழ்த்துவது தெருக்கூத்தாகும். தெருக்கூத்தை இந்திய நாட்டுப்புற நாடகம் (Indian Folklore) என்றனர். தெருக்கூத்தானது நாடக சபா, நாடகக்குழு, நாடக மன்றம், தெருக்கூத்து சபா, ஜமா என்னும் பல பெயர்களில் இயங்குகின்றன.”[2]

தெருக்கூத்துக்குழுவை ‘சபா’ என்று அழைக்கின்றனர். ஒவ்வொரு சபாவிற்கும் 15 முதல் 21 கலைஞர்கள் இருக்கின்றனர். குறைந்தது 15 பேராவது இருந்தால்தான் ஒரு சபா இயங்கமுடியம். இவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒரு சபா தொடங்கி சபாவிற்குத் தேவையான பொருட்கள் வாங்கி அவர்களுக்குப் பயிற்சிகள் கொடுத்துக் கூத்து நடத்துபவர் ‘சபா’ ஆசிரியர் (வாத்தியார்) என்று அழைக்கப்படுகிறார். இவரே இதன் முதலாளி. கூத்தில் திறமைமிக்கவராகவும், முதலீடு போட்டு சபா நடத்தும் வசதிப்பெற்றவராகவும் இருப்பவரே சபாவின் ஆசிரியராக திகழ முடியும்.

சமாவிற்குத் தேவையான இசைக்கருவிகள், உடைகள் தோள்கட்டைகள், ஆபரணங்கள், கலர் பவுடர்கள், வாள், கத்தி, திரை சீலைகள், சாட்டைகள் போன்றவற்றைத் தயாராக வைத்திருக்கின்றனர். புது சபா ஆரம்பிப்பவர் இவற்றையெல்லாம் வாடகைக்கு வாங்கிக் கொள்வார்கள்.

“சபா ஆரம்பிப்பவர் சபாவிலுள்ள ஒவ்வொரு கலைஞருக்கும் சபா ஆசிரியரிடமிருந்து 30,000, 40,000, 50,000,1,00,000 வரை இப்போது கடன் வாங்குகின்றனர். இப்பணத்திற்கு வட்டிப்பணம் என்று பெயர் கலைஞர்களைத் தன் பிடியில் வைத்துக்கொள்ளவே சபா ஆசிரியர் இவ்வாறு கடன் கொடுக்கிறார்.”[3] கூத்து ஆடும் காலங்களில் திரும்ப வசூல்

செய்து கொள்கின்றனர். இவ்வாறு கடன் பெற்ற கலைஞர்கள் அதிகப்பணம் தரும் சபாவிற்கு ஆடச்சென்று விடுகின்றனர். அது மட்டுமல்ல, சில நேரங்களில் கூத்துக்கு அழைத்த ஊர்க்காரர்களிடமும் சில சிக்கல்களைக் கூத்துக் கலைஞர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் பேசிய பணம் தர முடியாமல் சிறிது பணம் பாக்கி சொல்லி அனுப்பிவிட்டால் அதை அவர்களிடம் வாங்குவது இயலாத ஒன்று என்று கலைஞர்கள் குறைபடுகின்றனர். இதற்கெல்லாம் கிராமங்களில் நிலவும் வறுமையே காரணமாகும்.

இச்சிக்கல்களுக்கு இடையில் மக்கள் தெருக்கூத்துக்கு ஆதரவுத் தருகின்றனர். கலைஞர்களும் இதற்கெல்லாம் விட்டுக் கொடுத்துக் கூத்தாடி இன்றுவரை தங்களின் பாரம்பரியத்தையும் முன்னோர்கள் ஏற்படுத்திய கூத்துகலையை அழிக்காமல் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர் ஏனென்றால் கூத்தின்மீதுள்ள பற்றே ஆகும்;.

ஒப்பனை செய்யும் முறை

ஒப்பனை (Mackup) என்பது அலங்கரிக்கப்பட்ட நிலையாகும். அலங்கரித்தல் என்ற பொருள் என்றாலும் நாடக நடிகர்கள் செய்து கொள்ளும் அலங்காரத்தைக் குறிக்கிறது. கூத்திற்காக முகத்தையும் அழகு செய்தல் ஒப்பனையாகும்.

ஒப்பனையில் நிறங்கள் பற்றிய தெளிவு முக்கியமாகும். நீலம், சிவப்பு, மஞ்சள் என்பன அடிப்படை வர்ணங்களாகவும் அவற்றை கலப்பதனால் உருவாவது இரண்டாம் நிலை வர்ணங்களாகவும் கருதப்படுகின்றது.

ஒப்பனை பொதுவாக மூன்று வகைப்படும்

1. **நேரடி ஒப்பனை (Striaght Makeup)**

நேரடி ஒப்பனை எனும்போது பொதுவாக நாடகக் கலைஞர் எல்லோருக்கும் செய்யும் ஒப்பனை ஆகும்.

1. **சிறப்பான ஒப்பனை (Special Makeup)**

சிறப்பான ஒப்பனை எனும்போது பல் உடைந்தது போல், காயம்பட்டது போல், கண் குருடானது போல் காட்டப் பயன்படுகிறது.

1. **பாத்திரப் பண்பைக் காட்டும் ஒப்பனை (Character Makeup)**

பாத்திரப் பண்பைக் காட்டும் ஒப்பனையில் வர்ணங்கள் மூலமே இத்தன்மை வெளிப்படுகின்றது. மரபு வழி அரங்குகளில் இதற்கான மாதிரிகளைக் காணலாம். கிருஷ்ணருக்கு கருநீலமும், அர்ச்சுனனுக்கு வெளிர் நீலமும், வீமனுக்கு பச்சை நிறமும், துரியோதனனுக்கு சிவப்பு நிறமும், தர்மருக்கு செம்மஞ்சள் நிறமும், திரௌபதிக்கு இளஞ்சிவப்பு நிறமும் பயன்படுத்துவது அப்பாத்திரங்களின் பண்பை வர்ணங்களின் மூலம் வெளிக்காட்டுவதாகும்.

“வர்ணங்கள் பார்ப்போரிடம் உணர்வு மாற்றங்களைத் தரும். சிவப்பு-எழுச்சி, வீரம், மஞ்சள் - மங்கலம், மகிழ்ச்சி, நீலம் - அமைதி, தானம், பச்சை - பசுமை, வளம், கருப்பு -

கொடூரம், துக்கம், வெள்ளை - சமாதானம், சிவப்பு, கருப்பு, காவி, வெண்மை-பக்தியைக் குறிக்கும்.”[4]

கூத்து நடக்கும் இடத்தைக் ‘களரி’ என்று கூறுகின்றார்கள், களரிக்கு பின்புறமாக கொட்டகை அமைத்து ஒப்பனை செய்வார்கள். ஒப்பனை செய்யும் பொழுது முதலில் முகத்திற்கு அரிதாரம் பூசுகிறார்கள், அரசன், ராணி, சூரன், அரக்கன், காளி, கட்டியங்காரன், நாட்டியப்பெண், நாரதர் போன்ற ஒவ்வொரு வேடத்திற்கும் வித்தியாசப்படுகிறது.

சூரன், அரக்கன், காளி போன்ற துஷ்டவேடங்களுக்கு முதலில் முகத்திற்கு முத்துவெள்ளை, செந்தூரம் கலந்து, நல்லெண்ணை (அ) மணிலா எண்ணெய் (அ) தேங்காய் எண்ணெய் குழைத்துப் பூசுகிறார்கள். ஆனால் இந்த வேடங்களுக்கு வெள்ளையை மிகக்குறைவாகவும் செந்தூரம் (சிவப்பு) அதிகமாகவும் கலந்து பூசுகிறார்கள். முகத்தைப்பார்த்தால் சிவப்பா இருக்கும். பிறகு கண்புருவத்திற்கு கருப்பு மை தீட்டுகிறார்கள். கண்புருவத்தைச் சுற்றிக் கருப்பு வெள்ளைப் புள்ளிகள் வைக்கிறார்கள். கீழ் உதடுக்கு கீழ்ப்புறம் கருப்பு மையால் பூசுகிறார்கள். இரண்டு கன்னத்திலும் வட்ட வடிவில் கருப்பு, வெள்ளைப் புள்ளிகள் வைக்கிறார்கள். மீசையைப் பெரிதாகக் காட்டுகிறார்கள் (செயற்கையான மீசையைக் கட்டுகிறார்கள்) இவர்களுக்குத் தலையில் தலைக்கட்டையும், கட்டையின் மேல் கோழி இறகுகளையும் சொருகிறார்கள். சிலர் குச்சிமுடியும் கட்டி ஆடுகிறார்கள். மற்ற அரசர் வேடங்கள் அல்லது சாந்தமான வேடங்களுக்கு முகத்தில் சிறிது முத்து வெள்ளையும் தண்ணீரில் குழைத்து பூசுகிறார்கள், நெற்றியில் வேடத்திற்கு தகுந்தாற்போல் பூசை (பட்டை) நாமம், வெள்ளையாக போடுகிறார்கள் சிறு அளவில் கருப்பு மையில் மீசை வைக்கிறார்கள். சிலர் சிறு மீசையைக் கட்டிக்கொள்கிறார்கள்.

பெண்வேடம் போடுகிறவர்கள், முத்து வெள்ளை கண்மை, செந்தூரம் இவைகளைத்தான் பயன்படுத்துவார்கள். இவர்கள் மட்டும் பளபளவென மின்னுவதற்கு முகத்தில் அப்பேரக் (சிகினா) அடித்துக் கொள்கிறார்கள். மற்றபடி உடைகள் அனைத்தும் சாதாரணப் பெண்கள் உடுத்துவது போல் புடவை மட்டுமே உடுத்திக் கொள்கிறார்கள். கழுத்துக்கு நெக்லஸ், செயின், சவிரிமுடி, முடிநிறைய பூக்கள் கைக்கு வளையல்கள், காலுக்கு சலங்கை, அனைத்தும் போடுவதோடு இடுப்பில் பட்டை ஒன்று கட்டிக் கொள்கிறார்கள். இவர்கள் முகத்தில் போடுகின்றன அப்ரேக் (சிகினா) மின்சார விளக்கு வெளிச்சத்தில் மின்னும் ஃபப்பூன் (கட்டியங்காரன் (அ) கெட்டிக்காரன்) வேடத்திற்கும்,ரெட்ரோஸ் பவுடரைப் பூசி அப்ரேக் (சிகினா) பவுடரை அடிக்கிறார்கள் இதனால் இவர்கள் அனைவரும் மிகவும் அழகாகத் தெரிகிறார்கள்.

கூத்து முடிந்தப் பின்பு வேடத்தைக் கலைக்க எண்ணெய்த் தடவி துணியால் துடைத்தால் முகத்தில் பூசப்பட்ட அரிதாரங்கள் சுத்தமாக அழிந்துவிடுகிறது.

“கூத்து மட்டுமே தொழில் என்று இருப்பவர் அவர்கள் வேடத்திற்கு அவர்களே மேக்கப் (ஒப்பனை) செய்து கொள்கிறார்கள். தலைக்கட்டையம், புஜக்கட்டு ஆடை போன்றவற்றையும் மற்றவர்கள் உதவியுடன் கட்டுகிறார்கள் யார் எந்த வேடம் கட்டுகிறார்களோ! அந்த வேடத்திற்கு வேண்டிய சேலைகளை அவர்களாகவே எடுத்து வருகிறார்கள் முன்பெல்லாம் அந்தந்த ஊர்களில் வாங்கி கட்டிக்கொண்டு ஆடுவார்களாம். ஓர் ஆண்வேடத்திற்கு ஐந்து சேலை என்றும், ஓர் பெண் வேடத்திற்கு 1 சேலை என்றும் கூத்து ஆடும் கிராமத்தில் சுமார் 25 சேலைகளுக்குக் குறையாமல் சேகரித்துக் கொடுப்பார்கள் ஊர் பெரியவர்கள்.”[5]

தற்காலத்தில் இடுப்புக்குக் கீழே பேன்ட்டை அணிகின்றனர். ஆனால், முற்காலத்தில் நீண்டதுணியை இருகால்களிலும் சுற்றிக் கட்டியிருக்கின்றனர். இவர்கள் ஒப்பனை செய்யும் போது பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் பிரமிப்பாகவும் ஆச்சரியமுடனும் இருக்கும் ஆடுவது பாடுவது உரையாடுவதைவிட ஒப்பனைதான் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

“கூத்துக்கலைஞர்கள் அணியும் கட்டைகளாகிய முருங்கை, மாவிலிங்கமரம் போன்றவற்றில் செய்கின்றனர். இது அதிக கனமில்லாமல் இருக்கிறது. இக்கட்டைகளைச் செய்து விற்பதையே சிலர் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். கட்டைக்கட்டிக் கொண்டு ஆடுகிறவர்கள் இரண்டு பெரிய புஜங்களும், பெரிய குச்சிமுடியும், மார்ப்பட்டையும், இடுப்பில் மூன்றுசேலைகளால் சுற்றப்பட்டு அதன்மீது இரண்டு சேலைகளால் இடுப்பைப் பெரிதாகக் காட்டக்கூடிய அளவில் கட்டி வேடத்தின் தோற்றத்தையே மிகப் பெரியதாகக் கம்பீரமாகக் காட்டுமளவிற்கு கட்டுகிறார்கள்.”[6]

கூத்துக் கலைஞர்கள் கட்டியுள்ள கட்டைகள் சிகினா பேப்பரினால் ஒட்டப்பட்டு, சிறு சிறு கண்ணாடிகள் பதிக்கப்பட்டு இருப்பதால் விளக்கின் ஒளியில் பளபள என்று மின்னும்போது பார்ப்பவர்களுக்கு மிக அழகாக இருக்கிறது.

“உடல் முழுவதும் கயிற்றால் பல கட்டைகள் கட்டப்பட்டு இருக்கும் அப்படி இருந்தும் கம்பீரமாக பாடிக்கொண்டு ஆடுகிறார்கள். கட்டைகளைக் கட்டிக் கொண்டு ஆடுவது மிகவும் சிரமமான ஒன்று,ஆனால் கட்டை இல்லாமல் ஆடுவது எளிது. உடல் நோகாமலும், கட்டைகளை சுமக்காமலும், உடலை இறுக்காமலும் உடைகளை உடுத்திக் கொண்டு பாடி ஆடி விட்டு போய்விடுகிறார்கள். கட்டைக் கட்டாமல் ஆடுபவர்கள் ஆடும் விதமும் கட்டைக் கட்டிக்கொண்டு ஆடுபவர்கள் ஆடும் விதமும் வித்தியாசப்படும். கட்டைக் கட்டிக்கொண்டிருப்பவர்கள் அமரும் விதம் வித்தியாசமாக இருக்கும்.”[7]

கூத்து ஆடுகிறவர்கள் வேடம் போட்டுக்கொண்டு வெளியில் வருவதற்கு முன் திரைப்பாட்டைக் கொட்டகைக்கு உள்ளவே இருந்து பாடிக்கொண்டே ஓடிவந்து ஆகிறார்கள். திரைக்கு முன்புறம் தான் இசைக்கருவிகளை வாசித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

கூத்துக் கலைஞர்களுக்கு கட்டைக்கட்டினாலே கம்பீரம் வருகிறது. கட்டைக் கட்டாதவர்கள் அமைதியாகவே இருக்கிறார்கள். கட்டைக் கட்டிக்கொண்டு ஆடும்போதும் தான் தெருக்கூத்தின் வலிமையைத் தெரிகிறது. நமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பறைச்சாற்றுவதே கட்டைக்கூத்துதான் எனலாம்.

இராசா வேடம் போடுபவர்கள் இராசா போலவும், இராணி வேடம் போடுவர்கள் இராணி போலவும், அரக்கர்கள் வேடம் போடுபவர்கள் அரக்கர்கள் போலவும் ஒப்பனையிலும், உடையிலும், பேச்சிலும், இயல்பாகவே வந்து விடுகிறது எனலாம்.

முடிவுரை

கூத்துக் கலைஞர்கள் ஒப்பனை செய்யும்போது பார்ப்பதற்கு மிகவும் நேர்த்தியாக இருக்கும். ஒப்பனை செய்தாலே கதாபாத்திரம் போலவே மாறிவிடுகிறார்கள் அரிதாரம் பூசி உடை அணிந்தாலே கதாபாத்திரத்தின் இயல்புகள் இயல்பாகவே வந்து விடுகிறது. கூத்துக்கலைஞர்களுக்கு கட்டைக் கட்டினாலே கம்பீரம் வருகிறது. தெருக்கூத்திற்கும் கூத்துக்கலைஞர்களுக்கும் ஒப்பனையில்தான் தெருக்கூத்தின் வேரே உள்ளது எனலாம் ஒப்பனைதான் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

சான்றெண் விளக்கம்

1. காசி.இராமசாமி, ஒப்பிட்டுக் கூத்துக்கலைஞர்கள், ப 110.
2. பி.ஜே.அமலதாஸ், இன்றும் வாழும் தெருக்கூத்து, ப. 42.
3. இரா.சீனிவாசன்., மு.ஏழுமலை, கூத்துக்கலைஞர் உருவாக்கம், ப. 65.
4. முனைவர் சு.இராசரத்தினம், தெருக்கூத்து (கிருட்டிணகிரி வட்டார நிகழ்கலை ஆய்வு), ப. 16.
5. மேலது., ப. 25.
6. இரா.சீனிவாசன்., மு.ஏழுமலை, கூத்துக்கலைஞர் உருவாக்கம், ப. 69.
7. அமலதாஸ், கலை வளரும் அலைகடலோரம், ப. 101.

துணைநின்ற நூல்கள்

References

காசி.இராமசாமி, ஒப்பிட்டுக் கூத்துக்கலைஞர்கள், வெளியீடு விழிகள்,

சி,8எல், சி.டி.எஸ்.ரீ கல்பால்ம் கார்டன்ஸ், 383, வேளச்சேரி, தாம்பரம் சாலை, வேளச்சேரி, சென்னை-600 042.

பி.ஜே.அமலதாஸ், இன்றும் வாழும் தெருக்கூத்து, வெளியீடு-வம்சி புக்ஸ், 19, டி.எம்.சாரோன், திருவண்ணாமலை-606 601, முதற்பதிப்பு-2009 டிசம்பர்.

இரா.சீனிவாசன்., மு.ஏழுமலை, கூத்துக்கலைஞர் உருவாக்கம், பக்கங்கள் - 120, வெளியீடு-பரிசல் புத்தக நிலையம், 235,டீ.பிளாக், எம்.டி.ஓ.காலனி, அரும்பாக்கம், சென்னை–600006, முதற்பதிப்பு-டிசம்பர் 2019.

முனைவர் சு.இராசரத்தினம், தெருக்கூத்து (கிருட்டிணகிரி வட்டார நிகழ்கலை ஆய்வு), வெளியீடு-காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை–600024, முதல் பாதிப்பு-டிசம்பர் 2007.